**N–0278**

| Sub. Code |
| --- |
| **205111** |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year – First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பாரதியின் இயற்பெயர்

(a) சுப்பிரமணியன் (b) சுப்பையா

(c) கனகசுப்பு (d) முத்தையா

2. பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்ட இதழ்

(a) சுதேசமித்ரன் (b) இந்தியா

(c) விவேகபானு (d) ஜென்மபூமி

3. தலைவிக்குப் பொன்னொளியைப் பரிசாக நீட்டியது என்று கவிஞர் குறிப்பது

(a) இருள் (b) காலை

(c) பகலவன் (d) கணவன்

4. தலைவி முதற்படியாய்ப் படிக்க வேண்டும் என்று சொல்லும் மொழி

(a) ஆங்கிலம் (b) ஹிந்தி

(c) தமிழ் (d) இவை அனைத்தும்

5. அகராதி தேடாத சொல்லாட்சியில் அமைவது

(a) மரபுக்கவிதை (b) இருண்மைக் கவிதை

(c) சிறுகதைகள் (d) புதுக்கவிதை

6. கருப்பு மலர் பூக்கும் நாள்

(a) அமாவாசை (b) பூர்ணிமை

(c) கார்த்திகை (d) திசம்பர்

7. கி.பி.17 ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய இலக்கிய வடிவம்

(a) சென்ரியூ (b) ஹைக்கூ

(c) லிமரைக்கூ (d) தன்கா

8. மரத்தின் உள்ளங்கையில் காற்று பார்ப்பது

(a) ரேகை (b) பூக்கள்

(c) வேர்கள் (d) இவை ஏதுமில்லை

9. தமிழ்த் திரையுலகின் முதல் பெண் பாடலாசிரியர்

(a) ஔவை (b) தாமரை

(c) பாமா (d) அனுராதா ரமணன்

10. தாமரையின் சிறுகதைகளில் ஒன்று

(a) சந்திரக்கற்கள் (b) முட்டை

(c) வேலைக்காரி (d) நினைக்கப்படும்

11. தமிழ் நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

(a) சங்கரதாஸ் சுவாமிகள்

(b) டி.கே.சி.

(c) அண்ணா

(d) பம்மல் சம்பந்தம்

12. மீனலோச்சனி பால தத்துவ சபை என்னும் நாடகக் குழுவினை உருவாக்கியவர்

(a) சிவாஜி கணேசன்

(b) கருணாநிதி

(c) சங்கரதாஸ் சுவாமிகள்

(d) சோ.

13. சாகித்திய அகாதெமி விருது பெற்ற பிரபஞ்சனின் புதினம்

(a) வானம் வசப்படும்

(b) மானுடம் வெல்லும்

(c) நினைக்கப்படும்

(d) என்ன உலகமடா

14. செயந்தனின் நினைக்கப்படும் கதைமாந்தருள் பத்திரிக்கை ஆசிரியர்

(a) மரகதம் (b) பரஞ்சோதி

(c) மருதநாயகம் (d) பரமேஷ்வரன்

15. பக்த குசேலர் என்னும் நடகத்தினை இயற்றியவர்

(a) ஜெயந்தன் (b) புதுமைப்பித்தன்

(c) அண்ணா (d) பிரபஞ்சன்

16. ஜெயகாந்தனின் முதல் நாவல்

(a) மோகமுள் (b) சக்தி வைத்தியம்

(c) மரப்பசு (d) வாழ்ககை அழைக்கிறது

17. கிரேசியாடெலெடா என்ற நோபல் பரிசு பெற்ற புதினத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

(a) தி. ஜானகிராமன் (b) ஜெயகாந்தன்

(c) விசு (d) புதுமைப்பித்தன்

18. சூர்யகாந்தனின் தண்டிக்கப்படாத குற்றவாளி வெளி வந்த இதழ்

(a) கணையாழி (b) விகடன்

(c) தாமரை (d) குமுதம்

19. சாகித்திய அகதெமி விருது பெற்ற வைரமுத்துவின் படைப்பு

(a) கவிராஜன் கதை (b) கருவாச்சி காவியம்

(c) தண்ணீர் தேசம் (d) கள்ளிக்காட்டு இதிகாசம்

20. பாலைவனத்தில் கண்ணுக்குத் தெரியாமல் புதைந்திருக்கும் பாம்பு

(a) ஹனிஸ் (b) அசா

(c) மண்ணுளி (d) ராஜ நாகம்

21. கிராம மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு நாவல் படைத்தவர்

(a) அம்பை (b) கி. இராஜநாராயணன்

(c) வைரமுத்து (d) கிருத்திகாதேவி

22. கோபல்ல கிராமக் கோட்டையார் வீட்டின் முக்கியக் கதாபாத்திரம்

(a) ரெங்க நாயக்கர் (b) சுப்பன்னா

(c) நரசய்யா (d) அக்கையா

23. அனுராதா ரமணன் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிய இதழ்

(a) பெண்மணி (b) விகடன்

(c) மங்கையர் மலர் (d) மங்கை

24. அனுராதாரமணன் கதை எழுதி ஐந்து நந்தி விருது பெற்ற திரைப்படம்

(a) ஒக்க பாரிய கதா (b) தேசபக்தன்

(c) பாசம் (d) அர்ச்சனைப் பூக்கள்

25. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்னும் நூலின் ஆசிரியர்

(a) கவிமணி (b) நாமக்கல்லார்

(c) திரு.வி.க. (d) அசலாம்பிகை அம்மையார்

26. தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்பட்டவர்

(a) வண்ணதாசன் (b) புதுமைப்பித்தன்

(c) திரு.வி.க. (d) கல்யாண்ஜி

27. வண்ணதாசனின் அகமும் புறமும் என்பது ஒரு

(a) சிறுகதை (b) நாவல்

(c) நாடகம் (d) கட்டுரை

28. கல்யாண்ஜி என்னும் புனைப்பெயரில் கவிதைகள் எழுதுபவர்

(a) கண்ணதாசன் (b) வண்ணதாசன்

(c) இராகுலதாசன் (d) வைரமுத்து

29. தமிழ் நாடகத்தின் தலைமையாசிரியர் என்றழைக்கப்படுபவர்

(a) பம்மல் சம்பந்த முதலியார்

(b) சங்கரதாஸ் சுவாமிகள்

(c) அண்ணா

(d) பிரபஞ்சன்

30. தமிழ் வசன கவிதையின் முன்னோடி

(a) அப்துல் ரகுமான்

(b) வைரமுத்து

(c) பாரதிதாசன்

(d) பாரதி

31. ஹைக்கூ கவிதையின் முன்னோடி நாடு

(a) இந்தியா (b) சப்பான்

(c) சீனா (d) பிரான்ஸ்

32. தமிழில் எழுந்த முதல் சிறுகதை

(a) குளத்தங்கரை அரசமரம்

(b) பிராதாப முதலியார் சரித்திரம்

(c) சுகுண சுந்தரி

(d) கலித்தொகை

33. ஜெயந்தன் பெற்ற இந்திய இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருது

(a) தங்கத் தாமரை (b) இராசராசன் விருது

(c) புத்தன் (d) ஞானபீட விருது

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) பாரதநாட்டின் பெருமைகளாகப் பாரதியார் கூறுவன யாவை?

(அல்லது)

(b) பெண்ணின் காலைக் கடமைகள் குறித்துப் பாரதிதாசன் யாது கூறுகின்றார்?

35. (a) இலக்கணம் மீறிய கவிதை, புதுக்கவிதை என்பார் கூற்றை ஆய்க.

(அல்லது)

(b) ஈரோடு தமிழன்பன் பச்சை நெருப்பு சுட்டும் பொருண்மையினை விளக்குக.

36. (a) கவிஞர் நா. முத்துக்குமாரின் கவிதையின் கவித்துவத்தை விளக்குக.

(அல்லது)

(b) உலக நாடகத் தோற்ற வரலாற்றினை விவரிக்க.

37. (a) ஜெயந்தனின் நினைக்கப்படும் நாடக அமைப்பினை விவரிக்க.

(அல்லது)

(b) சிறுகதை எழுத்துலகில் புதுமைப்பித்தன் பெறுமிடத்தை விளக்கியுரைக்க.

38. (a) சூர்யகாந்தனின் 'ஒரு தொழிலாளியின் டைரி' சித்திரிக்கும் தொழிலாளியின் உள்ளக்குமுறலை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) ஆர். வெங்கடேஷின் கரைந்தவர்கள் தரும் செய்திகளைத் தருக.

39. (a) கோபல்ல கிராமத்தின் சிறப்பம்சமாகக் கி. இராஜ நாராயணன் யாது கூறுகின்றார்?

(அல்லது)

(b) அனுராதா ரமணனின் சிறை புதினக் கதை மாந்தர்கள் குறித்து விளக்குக.

40. (a) திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டினை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) வண்ணதாசன் பனந்தோப்பின் அழகாகக் கூறுவன யாவை?

| N–0279 |
|---|

| Sub. Code |
|---|
| 205112 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year – First Semester**

**Tamil**

**அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. அறத்துப்பாலின் இல்லறவியலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

   (a) 38 (b) 20

   (c) 4 (d) 30

2. திருக்குறளில் ஒரே ஒரு அதிகாரத்தை மட்டும் பெற்றமைந்த இயல்

   (a) இல்லறவியல் (b) அமைச்சியல்

   (c) துறவறவியல் (d) ஊழியல்

3. நீங்கா நிலன் ஆள்பவர்க்கு மிகவும் இன்றியமையாத பண்புகளின் எண்ணிக்கை

   (a) 4 (b) 3

   (c) 8 (d) 2

4. உவப்பத் தலைகூடி உள்ளம் பிரிதல் யாருடைய தொழில்

(a) புலவர் (b) உறவினர்

(c) நண்பன் (d) அரசன்

5. கற்பியலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

(a) 25 (b) 38

(c) 18 (d) 70

6. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் யாரிடத்து உள்ள பண்பு

(a) பகைவர் (b) நண்பர்

(c) காதலர் (d) சுற்றத்தார்

7. யாருடைய கேண்மையைக் கெழீஇக் கொளல்வேண்டும்?

(a) யானை அனையார் (b) நாய் அனையர்

(c) சிங்கம் அனையர் (d) பாம்பனையர்

8. மாரிபோல் மாண்ட பயத்ததாய் அமைவது

(a) சீரியார் நட்பு (b) துறவோர் தொடர்பு

(c) சுற்றத்தார் அன்பு (d) மனைவி செயல்

9. கற்றலின் நன்றாய் அமைவது

(a) உணர்தல் (b) அறிதல்

(c) கேட்டல் (d) பார்த்தல்

10. சொல்லால் முறை செய்தவன்

(a) இராசராசன் (b) நெடுஞ்செழியன்

(c) கரிகாலன் (d) இளஞ்செழியன்

11. இல்லை என மாட்டாதார் யாவர்?

(a) அறிவுடையோர் (b) வலிமையுடையோர்

(c) திருவுடையோர் (d) நற்குடிப்பிறந்தோர்

12. உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை எனப் பாடியவர்

(a) திருவள்ளுவர் (b) ஔவையார்

(c) கபிலர் (d) மாங்குடி மருதனார்

13. யாருடைய தொடர்பு இன்னாதது

(a) அறிவில்லாதவர் (b) கயவர்

(c) சூதாடுபவர் (d) கடுமொழியாளர்

14. சிறை இல் எதனைக் காத்து ஓம்பல் இன்னாதது?

(a) கரும்பினை (b) ஒழுக்கத்தை

(c) செல்வத்தை (d) நாட்டினை

15. தொல்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே - இதனுள் 'துழாய்' எனப்படுவது

(a) வில்வம் (b) துளசி

(c) கடம்ப மலர் (d) பாரிஜாதம்

16. பந்தம் உடையானிடத்துக் காணப்படும் இனியது யாது?

(a) செல்வம் (b) கல்வி

(c) படையாண்மை (d) செங்கோல்

17. பிறவாமைக் காக்கும் பிரான் யார்?

(a) சிவன் (b) பிரமன்

(c) திருமால் (d) முருகன்

18. ‘ஆறங்கம் நால்வதே மானாய் போற்றி’ என இறைவனைப் போற்றியவர்

(a) சுந்தரர் (b) காரைக்கால் அம்மையார்

(c) திருநாவுக்கரசர் (d) மாணிக்கவாசகர்

19. ‘துயரறு சுடரடி தொழுதுஎழு என் மனனே’ என இறைவனிடம் வேண்டியவர்

(a) ஆண்டாள் (b) நம்மாழ்வார்

(c) மாணிக்கவாசகர் (d) கருவூர்த்தேவர்

20. ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ எனப்பட்டவள்

(a) ஆண்டாள் (b) காரைக்கால் அம்மையார்

(c) மங்கையர்க்கரசியர் (d) குந்தவை நாச்சியார்

21. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை இடம்பெற்றுள்ள திருமுறை

(a) பதினோராம் திருமுறை

(b) ஒன்பதாம் திருமுறை

(c) எட்டாம் திருமுறை

(d) ஏழாம் திருமுறை

22. ‘கனிந்தவர் ஈசன் கழல்அடி காண்பர்’ எனப் பாடியவர்

(a) சுந்தரர் (b) திருமூலர்

(c) நாவுக்கரசர் (d) திருஞானசம்பந்தர்

23. சைவ சித்தாந்தம், அத்வைதம் ஆகிய இரு நிலைக்கும் ஒரு வகைச் சமரசம் கண்டவர்

(a) திருமூலர் (b) வள்ளலார்

(c) சிவப்பிரகாசர் (d) தாயுமானவர்

24. திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள திருமுறைகளின் எண்ணிக்கை

(a) 12 (b) 6

(c) 8 (d) 11

25. குணங்குடி மஸ்தான் சாகிபு மீது பஞ்சரத்தினம் பாடியவர்

(a) சபாபதி முதலியார் (b) முகமது லெப்பை

(c) சையது அலி (d) செய்கு தம்பி பாவலர்

26. செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலீம் புலவர் குணங்குடியார் மீது பாடிய பாடல்கள்

(a) ஒருபா ஒருபஃது (b) இருபா ஒருபஃது

(c) அந்தாதி (d) மும்மணிக்கோவை

27. சித்தார்த்தன் தந்தையின் பெயர்

(a) அசோகன் (b) சுத்தோதனன்

(c) பிம்பிசாரன் (d) புக்கர்

28. அன்னப்பறவையினைத் தன் அம்பினால் வீழ்த்தியவன்

(a) சித்தார்த்தன் (b) தேவதத்தன்

(c) தேவமாறன் (d) தைத்திரியன்

29. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் என்றவர்

(a) மாணிக்கவாசகர் (b) திருமூலர்

(c) சுந்தரர் (d) காரைக்கால் அம்மையார்

30. பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே எனச் சிவனைப் பாடியவர்

(a) திருநாவுக்கரசர் (b) சுந்தரர்

(c) சேதிராயர் (d) காரைக்கால் அம்மையார்

31. தொல்காப்பியர் பழமொழியை எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(a) அங்கதம் (b) பிசி

(c) முதுமொழி (d) வாயுரை மொழி

32. அறனிழுக்கா அல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடையது

(a) அமைச்சு (b) நட்பு

(c) அரசு (d) அறம் கூறும் அவையம்

33. பண்ணின் இசையாகி நின்றவர்

(a) சிவபெருமான் (b) முருகப் பெருமான்

(c) திருமால் (d) பிரமன்

**பகுதி ஆ** $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

34. (a) திருக்குறளில் கடவுள் வாழ்த்து உணர்த்தும் செய்திகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(b) இறைமாட்சி அதிகாரக் கருத்துகளை திருக்குறள் வழி விவரிக்க.

35. (a) தலைவன் குறிப்பறிந்து உரைக்கும் செய்திகள் யாவை?

(அல்லது)

(b) நட்பாராயும் திறம் குறித்து நாலடியார் உணர்த்துவனவற்றைத் தருக.

36. (a) அறிவுடைமையின் இன்றியமையாமையைப் பழமொழி நானூறு கொண்டு எடுத்துரைக்க.

(அல்லது)

(b) மனித வாழ்வின் உயர்விற்கான வழிமுறைகளை நல்வழி கொண்டு தொகுத்துரைக்க.

37. (a) வாழ்வின் இன்னாதன என இன்னாநாற்பது குறிப்பனவற்றைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(b) 'பொல்லாங் குரையாமை நன்று', 'அன்புடையராதல் இனிது' என முடியும் பாடல்கள் எடுத்துரைக்கும் இனியன யாவை?

38. (a) போற்றித் திருத்தாண்டகம் விளக்கும் சிவபெருமானின் பெருமைகளைத் தருக.

(அல்லது)

(b) ஆண்டாளின் திருமணக் கனவினை விளக்கி எழுதுக.

39. (a) அறம்செய்வான் திறம் குறித்துத் திருமூலர் உரைப்பன யாவை?

(அல்லது)

(b) தாயுமானவர் பரிபூராணந்தத்தில் இறைவனிடம் வேண்டுவனவற்றைக் கட்டுரைக்க.

40. (a) குணங்குடியாரின் பக்திச் சிறப்பினை நும் பாடப்பகுதி கொண்டு விரித்தெழுதுக.

(அல்லது)

(b) புத்தருக்கும் யசோதைக்குமான உரையாடலைத் தொகுத்துரைக்க.

| N–0280 |
|---|

| Sub. Code |
|---|
| 205113 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023.**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year - First Semester**

**தமிழ்**

**இலக்கணம் 1 - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ (33 × 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. உயிரெழுத்தின் வகைகள்

   (a) வல்லினம் (b) நெடில்

   (c) குறில் (d) B,C இரண்டும் சரி

2. நெடில் எழுத்துக்களின் மாத்திரை அளவு

   (a) கால் (b) அரை

   (c) ஒன்று (d) இரண்டு

3. 'காக்கை' - இலக்கணக் குறிப்பு

   (a) உடனிலை மெய்ம்மயக்கம்

   (b) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

   (c) விட்டிசை

   (d) ஒரு பறவை

4. தொல்காப்பிய விதிப்படி அகர உகரம் ——————ஆகும்.

(a) ஔகாரம் (b) ஐகாரம்

(c) அஉ (d) ஊகாரம்

5. உரையசைக் கிளவிக்கு எடுத்துக் காட்டு

(a) நாகு (b) எஃகி

(c) மியா (d) நொ

6. "நொ" என்பதன் பொருள்

(a) நொடித்தல் (b) நெய்தல்

(c) உண்ணுதல் (d) வருந்துதல்

7. வாய்ச்சி என்பது

(a) உடனிலை (b) வேற்றுநிலை

(c) ஈரொற்று உடனிலை (d) அனைத்தும் சரி

8. ஈறாகும் உயிரெழுத்துகளின் எண்ணிக்கை

(a) 12 (b) 11

(c) 7 (d) 5

9. மிடற்றில் பிறந்த வளி இசைக்கும் எழுத்துக்கள்

(a) சார்பெழுத்துக்கள் (b) மெய்யெழுத்துக்கள்

(c) உயிரெழுத்துக்கள் (d) அனைத்தும் சரி

10. இடை நா, இடையண்ணம் பொருந்தப் பிறப்பன

(a) க, ங (b) த, ந

(c) ட, ண (d) ச, ஞ

11. மெய்யெழுத்துக்கள் என்பவை

(a) புள்ளி பெறாது (b) புள்ளி பெறும்

(c) தனித்து வரும் (d) அனைத்தும் சரி

12. மகத்தாற் கொண்டான் என்பதில் வரும் புணர்ச்சி

(a) மெய்பிறிதாதல் (b) மிகுதல்

(c) குன்றல் (d) இயல்பு

13. ஐ, ஔ பெறும் எழுத்துச் சாரியைகள்

(a) கரம் (b) காரம்

(c) கான் (d) ன்னா

14. நாட்பெயர்முன் வலி முதலாக உடைய வினைச்சொற்கள் வரும்போது இடையே வரும் சாரியை

(a) இன் (b) அத்து

(c) அன் (d) ஆன்

15. சேர்த்து எழுதுக: முள் + நன்று =

(a) முள்ணன்று (b) முண்ணன்று

(c) முன்னன்று (d) முள்நன்று

16. இரண்டாம் வேற்றுமை திரிபில் மரப்பெயர்க்கிளவியில் தோன்றும் எழுத்து

(a) மெல்லினம் (b) வல்லினம்

(c) சார்பெழுத்து (d) இடையினம்

17. ஞ, ந மெய்யீறுகள் வேற்றுமையுடன் புணரும்போது பெறும் சாரியை

(a) ஆன் (b) ந்

(c) அன் (d) இன்

18. மகர ஈற்று உயர்திணை முன்னிலைப் பெயர்

(a) எல்லீர் (b) எல்லாரும்

(c) எல்லாம் (d) எல்லீரும்

19. சேர்த்து எழுதுக: ஒருபத்து + ஐ

(a) ஒருபானை (b) ஒருபத்தை

(c) ஒருபது (d) ஒரு பத்தினை

20. "ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே" என்பதில் கெடும் சாரியை

(a) இன் (b) அன்

(c) கண் (d) அனைத்தும் சரி

21. புளி என்னும் மரப்பெயர்க் கிளவி பெறும் சாரியை

(a) அத்து (b) க்கு

(c) இன் (d) அம்

22. வேற்றுமையில் ஐகார ஈறு பெறும் எழுத்து

(a) மெல்லெழுத்து (b) இடையெழுத்து

(c) இயல்பாகும் (d) வல்லெழுத்து

23. காலத்தை உணர்த்தும் இடைச்சொல்

(a) அணி (b) இனி

(c) தேடி (d) ஆடி

24. பிரித்து எழுதுக: கௌவுக்கடிது

(a) கௌவு + கடிது (b) கௌ + கடிது

(c) கௌக் + கடிது (d) அனைத்தும் சரி

25. உயிர் முதன்மொழியாய்க் கொண்ட நிறைப்பெயர் வரின் கீழ் எனும் சொல்

(a) உறழ்ச்சி பெறும் (b) குன்றும்

(c) இயல்பாகும் (d) அனைத்தும் சரி

26. அல்வழி வேற்றுமையில் ளகார ஈறு பெறும் முடிவு

(a) ணகாரமாகும் (b) டகரமாய்த் திரியும்

(c) ஆய்தமாகும் (d) இயல்பாகும்

27. உயிர்த்தொடர்க் குறிறியலுகரத்திற்கு எடுத்துக் காட்டு

(a) நாகு (b) எஃகு

(c) தெள்கு (d) வரகு

28. நிலைமொழிக் குற்றியலுகத்தின் முன் யகரம் வந்து புணரின் வருவது

(a) குற்றியலுகரம் (b) முற்றியலுகரம்

(c) குற்றியலிகரம் (d) அனைத்தும் சரி

29. 'வெண்ஞாண்' சார்ந்த மெய்ம்மயக்கம்

(a) உடனிலை (b) வேற்றுநிலை

(c) பொதுநிலை (d) இயல்புநிலை

30. அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் எனும் நூற்பா உணர்த்தும் அளபெடை

(a) இன்னிசை (b) செய்யுளிசை

(c) ஒற்றளபெடை (d) இசைநிறை

31. குரவு என்பது

(a) ஒரெழுத்தொரு மொழி

(b) மூன்றெழுத்து ஒரு மொழி

(c) ஈரெழுத்தொரு மொழி

(d) ஆறெழுத்தொரு மொழி

32. தேன் என்ற சொல்லில் 'ன்' எனும் சொல் வலி வரின்

(a) வலி மிகும் (b) இறுதி னகரம் கெடும்

(c) மெல்லினம் மிகும் (d) அனைத்தும் சரி

33. பிரித்து எழுதுக : வேணவா

(a) வேட்கை + அவா

(b) வேண் + அவா

(c) வேள் + அவா

(d) வேணா + வா

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) மாத்திரை என்றால் என்ன? விவரிக்க.

(அல்லது)

(b) 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' - இதனை விளக்குக.

35. (a) “மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே” - விரித்துரைக்க.

(அல்லது)

(b) மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் யாவை? விவரிக்க.

36. (a) மெய் எழுத்துக்கள் பிறக்குமிடங்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

(b) மொழி இறுதி எழுத்துக்கள் யாவை? விவரிக்க.

37. (a) எழுத்துச் சாரியை என்றால் என்ன? விவரிக்க.

(அல்லது)

(b) இரண்டாம் வேற்றுமை எவ்வகைத் திரிபுகளைப் பெறும்?

38. (a) உயிர் ஈறுகள் உருபேற்கும் முறையினை விவரிக்க.

(அல்லது)

(b) முற்றுகர ஈறு உருபேற்கும் பொருத்தப்பாட்டினை விவரிக்க.

39. (a) எவ்வகை அகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் இயல்பாகும்? விவரி.

(அல்லது)

(b) வேற்றுமையில் ஐகார ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக.

40. (a) எல்லாரும், எல்லீரும் என்பன வேற்றுமை அல்வழியில் எவ்வாறு புணரும்?

(அல்லது)

(b) திசைப் பெயர்களோடு திசைப்பெயர்கள் புணருமாற்றை விளக்குக.

| N–0281 |
|---|

| Sub. Code |
|---|
| 205114 |

**M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year – First Semester**

**இலக்கியத் திறனாய்வியல்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. திறனாய்வாளனின் தகுதிகள்

(a) ஆழ்ந்த புலமை (b) துணிவு

(c) உண்மை தேடல் (d) இவை அனைத்தும்

2. திறனாய்வின் பயன்

(a) படைப்பின் தனிச்சிறப்பை அறிதல்

(b) படைப்பாளியின் ஆளுமையை அறிதல்

(c) (a) மட்டும் சரி

(d) (a), (b) இரண்டும் சரி

3. உரைகளின் மூலம் திறனாய்வு வளர்ச்சிக்கு வித்திட்டவர்

(a) இளம்பூரணர் (b) சேனாவரையர்

(c) பேராசிரியர் (d) நச்சர்

4. சமூகப் பயன்பாடும் வாழ்க்கைப் பயன்பாடும் உடையாதாய் இருத்தல்

(a) இலக்கியம் (b) மொழி

(c) கலைகள் (d) கல்வி

5. நெடுநல்வாடை அகப்பாடல்களுக்குரிய விதிகளை மீறியதாகக் கருதியவர்

(a) இளம்பூரணர் (b) திருஞானசம்பந்தம்

(c) நச்சினார்க்கினியர் (d) பேராசிரியர்

6. நனவழியப் பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவது கவிதை என்பவர்

(a) பாரதி (b) மேத்தா

(c) இளம்பூரணர் (d) ரெனிவெலாக்

7. ஒப்பீட்டு முறைத் திறனாய்வுக்கு அடிகோலியவர்

(a) பாலச்சந்திரன் (b) ஜி.யூ.போப்

(c) கைலாசபதி (d) தொல்காப்பியர்

8. தமிழில் பாராட்டுமுறைத் திறனாய்வுக்கு அதிகம் உட்படுத்தப்பெற்ற இலக்கியம்

(a) திருக்குறள் (b) கம்பராமாயணம்

(c) பாரதம் (d) நளவெண்பா

9. 'கரும்பு நடு பாத்தியில் கலித்த தாமரை' என்பதில் தாமரைக்குக் கூறும் ஒப்புமை

(a) தலைவி (b) தலைவன்

(c) நற்றாய் (d) பரத்தை

10. "பல்வேறு படிமங்களை ஒன்றுடன் ஒன்றிணைப்பதுதான் கற்பனை" என்பவர்

(a) கோல்ட்ரிட்ஜ் (b) வோர்ட்ஸ்வொர்த்

(c) ஸ்டீபன் (d) தொல்காப்பியர்

11. மனிதனின் உடற்கூறுடனும் நரம்புக்கூறுடனும் தொடர்புடைய கனவு

(a) பகற்கனவு (b) கற்பனைக் கனவு

(c) உறக்கக் கனவு (d) உணர்ச்சிக் கனவு

12. கனவில் மனித அனுபவங்கள் மிகத் தெளிவான வடிவத்தைப் பெறுகின்றன என்றுரைப்பவர்

(a) பிராய்டு (b) வின்செஸ்டர்

(c) யுங் (d) கோல்ட்ரிட்ஜ்

13. சிந்தனைக்கு அப்பாற்பட்டு ஒருவரோடொருவர் இணங்கவும் தொடர்பு கொள்ளவும் வைப்பது

(a) அறிவு (b) கற்பனை

(c) உணர்ச்சி (d) வடிவம்

14. சிறந்த கவிதையில் ஆற்றல் மிகுந்ததாக இருக்க வேண்டிய கூறு

(a) உணர்ச்சி (b) கற்பனை

(c) பாடுபொருள் (d) வடிவம்

15. அணங்கு, விலங்கு கள்வர், இறை ஆகியனவற்றால் ஒருவனுக்கு உண்டாவது

(a) நகை (b) இளிவரல்

(c) மருட்கை (d) அச்சம்

16. இளிவு, இழவு, அசைவு, வறுமை காரணமாகப் பிறக்கும் மெய்ப்பாடு

(a) உவகை (b) அழுகை

(c) மருட்கை (d) இளிவரல்

17. ஓர் இலக்கியப் படைப்பின் அடிப்படைக் கூறுகளின் இணைவால் கிடைப்பது

(a) உருவகம் (b) கற்பனை

(c) வடிவம் (d) கட்டமைப்பு

18. இலக்கியப் படைப்பு ஒரு முகமாக இயங்கி முழுமை பெறுதல் என்பது

(a) கற்பனை (b) வடிவம்

(c) உணர்ச்சி (d) உளவியல்

19. கவிதையின் சிறப்பான உத்தியாகத் திறனாய்வாளர்கள் குறிப்பது

(a) உணர்ச்சி (b) எதுகை

(c) மோனை (d) தொடை

20. ஓர் இலக்கியப் படைப்பின் புறவடிவக் கூறுகளில் ஒன்று

(a) சொல்வளம் (b) கருத்து

(c) உணர்ச்சி (d) இவை ஏதுமில்லை

21. இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் தருவது

(a) உளவியல் (b) சமூகவியல்

(c) மானிடவியல் (d) அறவியற் கொள்கை

22. அறநெறிக் கொள்கையின் படிநிலைகளாக அறிஞர் குறிப்பிடுவது

(a) மூன்று (b) ஐந்து

(c) இரண்டு (d) நான்கு

23. ஜெயகாந்தனின் அக்னிப் பிரவேசம் தொடர்புடைய இதிகாசம்

(a) மகாபாரதம் (b) இராமாயணம்

(c) கந்தபுராணம் (d) பாஞ்சாலி சபதம்

24. பாரதியின் கட்டற்ற பெண்மையின் ஆற்றலாக உருவாக்கப்பட்ட படைப்பு

(a) அம்பை (b) மணிமேகலை

(c) பாஞ்சாலி (d) கண்ணகி

25. பெண்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகளுள் ஒன்றாய் வைரமுத்து கூறுவது

(a) வரதட்சணை (b) திருமணம்

(c) கல்வி மறுப்பு (d) சம உரிமை இன்மை

26. உயர்வான கற்பனைகளில் சஞ்சரிப்பது

(a) உளவியல் (b) யதார்த்தம்

(c) சமூகவியல் (d) புனைவியல்

27. குறியீட்டியல் இயக்கம் தோற்றம் பெற்ற நாடு

(a) இங்கிலாந்து (b) பிரான்ஸ்

(c) இந்தியா (d) அமெரிக்கா

28. குறியீட்டியலைக் குறிக்கும் தமிழ்ச்சொல்

(a) வண்ணம் (b) உருவகம்

(c) உள்ளுறை (d) உவமை

29. தமிழில் சமூகவியல் திறனாய்வினை வளர்த்தவர்களில் குறிக்கத்தக்கவர்

(a) க.கைலாசபதி (b) எஸ். பொன்னுதுரை

(c) தனிநாயக அடிகள் (d) பிரபஞ்சன்

30. தமிழில் முதன்முதலில் திறனாய்விற்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்

(a) வீரர் உலகம்

(b) வாழும் வள்ளுவம்

(c) தற்காலத் தமிழ் இலக்கியம்

(d) திருக்குறள் நீதி இலக்கியம்

31. "Criticism" எனும் சொல்லிற்குத் தமிழில் விமர்சனம் என்ற சொல்லைக் கையாண்டவர்

(a) க. கைலாசபதி (b) சி.சு. செல்லப்பா

(c) ஆ. முத்துசிவன் (d) மு.வ

32. "உளவியலின் தந்தை" எனப் போற்றப்படுபவர்

(a) சிக்மண்ட் பிராய்டு (b) வில்ஹெல்ம் வுண்ட்

(c) யூங் (d) டாக்டர் ருத்ரன்

33. கவிதையின் அடிப்படைக் கூறு

(a) கற்பனை (b) வடிவம்

(c) உணர்ச்சி (d) கருத்து

## பகுதி ஆ (7 × 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) திறனாய்வாளனுக்குரிய தகுதிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(b) இலக்கியக் கல்வியின் பயனை எடுத்துரைக்க.

35. (a) மதிப்பீட்டுத் திறனாய்வு என்றால் என்ன? விவரிக்க.

(அல்லது)

(b) ஒப்பீட்டு முறைத் திறனாய்வின் பயன்கள் யாவை?

36. (a) கவிதையின் சொல்வளம் குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(b) கற்பனையின் ஆற்றல் குறித்து மதிப்பிடுக.

37. (a) தகுதியுடைய உணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(b) சமனிலை உணர்ச்சி என்றால் என்ன? விளக்கியுரைக்க.

38. (a) கருத்தும் வடிவமும் விளக்கியுரைக்க.

(அல்லது)

(b) "இலக்கியப் படைப்பிற்கு இன்றியமையாதது உருவகம்" – விவரிக்க.

39. (a) அறவியல் பார்வையில் இலக்கியத்தை அணுகுதல் எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

(b) தொல்படிமவியல் என்றால் என்ன? விளக்குக.

40. (a) நடப்பியல் திறனாய்வு முறையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) படிமவியல் அணுகுமுறை என்றால் என்ன? விளக்குக.

| N–0282 |
|---|

| Sub. Code |
|---|
| 205121 |

**M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year – Second Semester**

**Tamil**

**இலக்கணம்-2 தொல்காப்பியம் சொல்லதிகாரம் – சேனாவரையம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours                Maximum : 75 Marks

**பகுதி அ**                $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. ஒன்றறி கிளவி எதனை ஊர்ந்த குன்றியலுகரத்து இறுதியாகும்?

   (a) தறண  (b) தறவ

   (c) த ற ட  (d) தறர

2. அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் கிளவி எது?

   (a) அடை  (b) சினை

   (c) முதல்  (d) யாது

3. திணை விரவிவரும் பெயர் எது?

   (a) வியங்கோள் எண்ணுப்பெயர்

   (b) வேறுவினைப் பொதுச்சொல்

   (c) இரட்டைக்கிளவி

   (d) ஒருபெயர்ப் பொதுச்சொல்

4. "மாவும் தேரும்" என்பதில் 'மா' என்னும் வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல் எதனால் உணரப்படும்?

(a) வினை

(b) இனம்

(c) சார்பு

(d) எதுவுமில்லை

5. அதன்தகு கிளவிக்குரிய சான்று எது?

(a) மண்ணானியன்ற குடம்

(b) அறிவானமைந்த சான்றோர்

(c) வாணிகத்தானாயினான்

(d) எண்ணொடு விராய அரிசி

6. ஆறாம் வேற்றுமைக்குரிய பொருள் எது?

(a) வண்ணம் (b) வடிவு

(c) அளவு (d) இயற்கை

7. ஏதுப்பொருண்மையுமாய் அமைவது எது?

(a) நோக்கல் நோக்கம்

(b) பிண்டப்பொருள்

(c) ஒருவினை ஒடுச்சொல்

(d) கன்றல், செலவு

8. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமையில் மயங்கும் உருபு எது?

(a) ஐ (b) இன்

(c) கு (d) கண்

9. கிழங்குமணற் கீன்ற முளை என்னும் தொடரில் சிறந்து நிற்கும் பொருள் எது?

(a) உடைமைப் பொருள்

(b) தற்கிழமைப் பொருள்

(c) இடப் பொருள்

(d) பிறிதின் கிழைமைப் பொருள்

10. உயர்திணைப் பெயர்களுள் விளியேற்கும் மெய்யீறுகள் யாவை?

(a) டரலள (b) னரலள

(c) தரலள (d) யரலள

11. விளியேற்கும் உயிரீறுகளுள் ஓவும் உவ்வும் எதனோடு சிவணும்?

(a) ஏயோடு சிவணும் (b) ஈயொடு சிவணும்

(c) ஆயொடு சிவணும் (d) இயற்கையாகும்

12. விளியேற்காத பெயர் எது?

(a) துறைவன் (b) ஊரன்

(c) சோழன் (d) தான்

13. பாலறி வந்த உயர்திணைப் பெயர்களுள் நம்மூர்ந்து வரும் ஐகாரப்பெயர் எது?

(a) நம்பி (b) நங்கை

(c) நமர் (d) நமள்

14. அம்பர்கிழான் என்பது என்ன பெயர்?

(a) உடைமைப் பெயர் (b) பண்புகொள்பெயர்

(c) நிலப்பெயர் (d) குடிப்பெயர்

15. பாலறிவந்த அஃறிணைப் பெயர்களுள் பண்புக்கொள் பெயர் எது?

(a) ஏறுவது (b) வருவது

(c) செல்வது (d) செய்யது

16. விரவுப் பெயர்களுள் ஒருமையைக் குறிப்பது எது?

(a) தாம் (b) தான்

(c) எல்லாம் (d) நீயிர்

17. வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றுவது எது?

(a) பெயர்ச்சொல் (b) வினைச்சொல்

(c) இடைச்சொல் (d) உரிச்சொல்

18. படர்க்கையாரை உளப்படுத்தும் உயர்திணைத் தன்மைப்பன்மை வினைமுற்று ஈறுகள் யாவை?

(a) கும், டும் (b) தும், றும்

(c) அம், ஆம் (d) எம், ஏம்

19. பண்புப்பொருளில் வரும் உயர்திணைக் குறிப்பு வினைமுற்று எது?

(a) கரியன் (b) பொன்னன்னன்

(c) இல்லத்தன் (d) கச்சினன்

20. மூன்று காலமும் பற்றி வரும் வினையெச்ச வாய்ப்பாடு எது?

(a) செய்யியர் (b) செய்யிய

(c) செய (d) செயற்கு

21. செய்யும் என்னும் பெயரெச்சத்தில் பொருள் என்னும் தொழில் முதனிலைக்குரிய சான்று எது ?

(a) வாழுமில்

(b) கற்குநூல்

(c) துயிலுங்காலம்

(d) வளையுங்கோல்

22. மன், தில் ஆகிய இரண்டு இடைச்சொற்களுக்குரிய பொருள் எது ?

(a) கழிவு (b) ஆக்கம்

(c) விழைவு (d) ஒழியிசை

23. உம்மைச் சொல்லுக்குரிய பொருள் எது ?

(a) எச்சம் (b) பயமிலி

(c) காலம் (d) பெருமை

24. ஏகார இடைச்சொல்லுக்குரிய பொருள் எத்தனை ?

(a) 6 (b) 5

(c) 4 (d) 3

25. குறிப்பொடு கொள்ளாத இடைச்சொல் எது ?

(a) நன்றே (b) அன்றே

(c) அந்தோ (d) அன்னே

26. பிரிந்து சென்று ஒன்றாக எண்ணிடைச்சொல் எது ?

(a) என்று (b) என

(c) உம் (d) ஒடு

27. வளமாகிய பொருள் உணர்த்தும் உரிச்சொல் எது?

(a) செல்லல் (b) இன்னல்

(c) நனி (d) மல்லல்

28. இயைபு என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள் யாது?

(a) இசை (b) புணர்ச்சி

(c) சுழற்சி (d) புகழ்

29. அச்சப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?

(a) பேம், நாம், உரும் (b) பேம், சேர், உரும்

(c) பேம், கழும், உரும் (d) பேம், கமம், உரும்

30. இயற்சொல் எது?

(a) வெற்பு (b) விலங்கல்

(c) விண்டு (d) கமுகு

31. கொடி குவளை கொட்டை என்பதற்கான பெயர் நிரனிறை வரிசை எது?

(a) நுசும்பு மேனி உண்கண்

(b) நுசுப்பு உண்கண் மேனி

(c) உண்கண் மேனி நுசுப்பு

(d) மேனி நுசுப்பு உண்கண்

32. மன்றப்பெண்ணை என்பதில் அமைந்துள்ள தொகை யாது?

(a) பண்புத்தொகை (b) உவமத்தொகை

(c) வினைத்தொகை (d) வேற்றுமைத்தொகை

33. வேங்கைப்பூ என்பதில் தொகைப்பொருள் சிறந்து நிற்கும் இடம் எது?

(a) முன்மொழி நிலையல்

(b) இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையல்

(c) பின்மொழி நிலையல்

(d) அல்மொழி நிலையல்

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.

34. (a) இருதிணை மருங்கின் ஈற்றில் நின்றிசைக்கும் பதினொரு எழுத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(b) இயற்பெயர்க்கிளவியும் சுட்டுப்பெயர்கிளவியும் அமையுமாற்றை விளக்குக.

35. (a) ஐந்தாம் வேற்றுமை குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(b) ஆகுபெயர் குறித்து எடுத்துரைக்க.

36. (a) உயர்திணையில் உயிரீறுகள் விளியேற்றலை விவரிக்க.

(அல்லது)

(b) பாலறி வந்த உயர்திணைப் பெயர்களைத் தொகுத்துரைக்க.

37. (a) விரவுப் பெயர்களின் பாகுபாட்டைக் கட்டுரைக்க.

(அல்லது)

(b) அஃறிணைப் பன்மை வினைமுற்று, ஒருமை வினைமுற்று குறித்து விவரிக்க.

38. (a) வினையெச்ச வாய்பாடுகள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(b) இடைச்சொல்லின் பொது இலக்கணம் குறித்துக் கட்டுரைக்க.

39. (a) குறிப்புச் சொற்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(b) குறிப்புப் பற்றி வரும் பலசொல் ஒருபொருட்கு உரிய உரிச்சொற்களைத் தொகுத்தெழுதுக.

40. (a) சுண்ணப் பொருள்கோள், அடிமாற்றுப் பொருள்கோள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) எச்சங்கள் குறித்துக் கட்டுரைக்க.

| N–0283 |
|---|

| Sub. Code |
|---|
| 205122 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023**

**ONLINE PROGRAMMES EXAMINATIONS**

**First Year – Second Semester**

**Tamil**

தமிழர் பண்பாடும் கலையும்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தற்போது தமிழ்நாட்டில் வழங்கப்படும் பல வீரத் தெய்வங்கள் —————— வழிபாட்டிலிருந்து தோன்றியவையே.

   (a) இயற்கை (b) நடுகல்

   (c) திணைத்தெய்வ (d) சமய

2. வெறியாட்டோடு தொடர்புடைய தெய்வம் ——————

   (a) முருகன் (b) மாயோன்

   (c) கொற்றவை (d) இந்திரன்

3. வச்சிரத் தடக்கை நெடியோன் யார் ?

   (a) சிவன் (b) முருகன்

   (c) திருமால் (d) இந்திரன்

4. முதன்முதலில் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்த இசுலாமியர்

(a) திப்புசுல்தான் (b) மாலிக்காபூர்

(c) உலூக்கான் (d) குஸ்ரூகான்

5. கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி தனது பெயரை —————————எனத் தமிழில் மாற்றிக்கொண்டார்.

(a) வீரமாமுனிவர் (b) தத்துவப்போதகர்

(c) போப்பையர் (d) ஆபிரகாம் பண்டிதர்

6. ஆங்கிலக் கல்வித் திட்டம் உருவான ஆண்டு எது ?

(a) 1852 (b) 1854

(c) 1862 (d) 1864

7. இந்து விதவை மறுமண உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு —————————

(a) 1856 (b) 1865

(c) 1956 (d) 1965

8. சதுரகராதி தந்த ஐரோப்பியர் யார் ?

(a) கால்டுவேல் (b) தத்துவப்போதகர்

(c) வீரமாமுனிவர் (d) எல்லீஸ்

9. தொல்காப்பியக் கருப்பொருள்களில் இடம்பெற்றுள்ள இசைக்கருவி —————————

(a) குழல் (b) கொம்பு

(c) கடம் (d) பறை

10. முழவு, முரசு, படலை போன்றவை ——————— வகையைச் சார்ந்தவை.

(a) நரம்புக்கருவி (b) துளைக்கருவி

(c) தோற்கருவி (d) கஞ்சக்கருவி

11. குறிஞ்சிநில மக்கள் பயன்படுத்திய பறை ———————

(a) துடிப்பறை (b) கிணைப்பறை

(c) ஏறுகோட்பறை (d) தொண்டகப்பறை

12. ———————நரம்புகளைக் கொண்டது செங்கோட்டு யாழ்.

(a) 7 (b) 14

(c) 19 (d) 21

13. "சங்கீரணசாதி" எனப்பட்டவன் யார் ?

(a) மகேந்திரவர்மன் (b) நரசிம்மவர்மன்

(c) நந்திவர்மன் (d) ராஜசிம்மன்

14. கீர்த்தனைப் பாடல்கள் ———————காலத்தில் தமிழகத்தில் நுழைந்தன.

(a) நாயக்கர் (b) பல்லவர்

(c) பாண்டியர் (d) சோழர்

15. சர்வ சமய சமரசக் கீர்த்தனை பாடியவர் ———————

(a) பட்டணம் சுப்பிரமணிய ஐயர்

(b) கவிக்குஞ்சர பாரதியார்

(c) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

(d) மாம்பழக் கவிராயர்

16. வெறியாட்டு என்பது ——————————வேண்டிச் செய்யும் சடங்காகும்.

(a) திருமாலை (b) முருகனை

(c) கொற்றவையை (d) இந்திரனை

17. முல்லை சான்ற கற்பின் மெல்லியல் எனச் சிறுபானாற்றுப்படை குறிப்பிடுவது

(a) பாண்மகளை (b) விறலியை

(c) தோழியை (d) தலைவியை

18. சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது ஆடியது —————————— கூத்தாகும்.

(a) மல்லாடல் (b) குடக்கூத்து

(c) கொடுகொட்டி (d) கடையம்

19. சைவ, வைணவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் ——————

(a) நாயக்கர் காலம் (b) பல்லவர் காலம்

(c) பாண்டியர் காலம் (d) சோழர் காலம்

20. தலைக்கோலி பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது.

(a) நாடக மகளிர் (b) விறலியர்

(c) பாடினியர் (d) நாட்டிய மகளிர்

21. தளிச்சேரிகள் யாரால் உருவாக்கப்பட்டன ?

(a) முதல் இராசராசன்

(b) இரண்டாம் இராசேந்திரன்

(c) மூன்றாம் குலோத்துங்கன்

(d) விக்கிரம சோழன்

22. முதல் பெண் நாடகாசிரியர் யார் ?

(a) மாயா ஏஞ்சலோ (b) இலட்சுமி அம்மாள்

(c) வேம்பம்மாள் (d) இந்திரா

23. வட்ட வடிவ விமானமுடையது ——————கோயிலாகும்.

(a) மணிக்கோயில் (b) கரக்கோயில்

(c) பெருங்கோயில் (d) கொகுடிக் கோயில்

24. பஞ்சப் பாண்டவர் இரதங்கள் யாருடைய ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டன ?

(a) மகேந்திரவர்மன் (b) இராசசிம்மன்

(c) நந்திவர்மன் (d) நரசிம்மவர்மன்

25. தஞ்சைப் பெரியகோயில் விமானம் ——————அடி உயரம் கொண்டது.

(a) 216 (b) 230

(c) 246 (d) 247

26. "சித்திரகாரப்புலி" என்னும் சிறப்பு பட்டம் யாருக்குரியது?

(a) நரசிம்மவர்மன் (b) மகேந்திரவர்மன்

(c) ராஜசிம்மன் (d) நந்திவர்மன்

27. கண்ணுள் வினைஞர் எனப்படுவோர் யார் ?

(a) நடனக்கலைஞர் (b) கூத்துக்கலைஞர்

(c) ஓவியக்கலைஞர் (d) இசைக்கலைஞர்

28. காஞ்சி வரதராசப்பெருமாள் கோயிலில் ____________ ஓவியங்கள் உள்ளன.

(a) விஜயநகரத்தாரின் (b) மராட்டியரின்

(c) மதுரை நாயக்கரின் (d) பல்லவர் கால

29. ____________காலத்திற்கு முன்பு பெரும்பாலும் மண், கதை உருவங்களே செய்யப்பட்டன.

(a) பாண்டியர் (b) நாயக்கர்

(c) பல்லவர் (d) சோழர்

30. மாமல்லபுரம் யாருடைய கலைக்கூடமாக விளங்குகிறது.

(a) நாயக்கர்களின் (b) பாண்டியர்களின்

(c) சோழர்களின் (d) பல்லவர்களின்

31. திருவிளையாடல் புராண நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் ____________காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன.

(a) சோழர் (b) பல்லவர்

(c) நாயக்கர் (d) பாண்டியர்

32. மன்னர் முதலியோர்க்கு எடுக்கும் உருவச் சிலைகள் ____________

(a) இயற்கை உருவங்கள்

(b) படிமை உருவங்கள்

(c) கற்பனை உருவங்கள்

(d) தத்ரூப உருவங்கள்

33. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் ____________

(a) சோழர் காலம் (b) பாண்டியர் காலம்

(c) பல்லவர் காலம் (d) நாயக்கர் காலம்

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக.

34. (a) நடுகல் வழிபாட்டு மரபு குறித்து விளக்குக.

(அல்லது)

(b) இசுலாமியர் ஆட்சியில் தமிழில் கலந்த வேற்றுமொழிச் சொற்கள் குறித்து எழுதுக.

35. (a) தொல்காப்பியர் சுட்டும் இசை குறித்த செய்திகளை விளக்குக.

(அல்லது)

(b) ஐரோப்பியர்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.

36. (a) பழந்தமிழர் இசைக்கருவிகளை விளக்குக.

(அல்லது)

(b) சோழர்கால இசைக்கலை வளர்ச்சி குறித்து எழுதுக.

37. (a) வெறியாட்டு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(b) பல்லவர் கால நாடகக்கலையின் சிறப்பினை விளக்குக.

38. (a) முதலாம் இராசராசன் கலை வளர்ச்சிக்கு அளித்த முக்கியத்துவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) பல்லவர்களின் கோயிற்கலைப் பாணி குறித்து எழுதுக.

39. (a) சங்க இலக்கியம் சுட்டும் ஓவியக்கலை குறித்து விளக்குக.

(அல்லது)

(b) நாயக்கர் கால ஓவியக்கலையின் மேன்மையினை எடுத்துரைக்க.

40. (a) பல்லவர் காலச் சிற்பக்கலை வளர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(b) செப்புத் திருமேனிகளின் வகைமை கூறி விளக்குக.

———————

| N–0284 |
|---|

| Sub. Code |
|---|
| 205123 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023**

**ONLINE PROGRAMMES EXAMINATIONS**

**First Year – Second Semester**

**Tamil**

**திறனாய்வுக் கோட்பாடு**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நூல்களை, அந்த மணி நேரத்துக்கு உரிய நூல், எந்தக் காலத்துக்கும் உரிய நூல் என வகைப்படுத்தியவர்

   (a) ஸ்கின் (b) மார்ட்டின்

   (c) சாலமன் (d) பிரடரிக்

2. பல்துறைத் தொடர்பு, அவாய்நிலை என்னும் இருவகைப் பார்வைகளால் உருவாக்கப்படுவது

   (a) வட்டார மொழி (b) மொழிக்கோட்பாடு

   (c) சொல் (d) இலக்கியக்கோட்பாடு

3. 'தமிழ் இலக்கியத்தில் செவ்வியல் காலம்' - என்ற நூலின் ஆசிரியர்

   (a) க. கைலாசபதி

   (b) அ. ச. ஞா.

   (c) என். கிருஷ்ணசாமி ஐயங்கார்

   (d) சிவத்தம்பி

4. ‘புலவர் புராணம்’ என்ற நூலை எழுதியவர்

(a) க. கைலாசபதி (b) தண்டபாணி சுவாமிகள்

(c) வானமாமலை (d) டி. கே. சி.

5. கவிதையின் மதிப்பு முழுமையும் அதன் உள்ளகத்திலிருந்து மதிப்பிடுதல் வேண்டும் என்றவர்

(a) பிராட்லி (b) ஹட்சன்

(c) வேர்ட்ஸ் வொர்த் (d) கீட்ஸ்

6. ‘கவிதைக் கொள்கை’ என்ற நூலின் ஆசிரியர்

(a) எட்கர் ஆலன்போ (b) ஹட்சன்

(c) மில்டன் (d) தெரிதா

7. ‘பழந்தமிழரின் மரபுவழி’ என்ற நூலினைத் தந்தவர்

(a) மு. அருணாசலம் பிள்ளை

(b) கே. என். சிவராச பிள்ளை

(c) திரு. வி. க.

(d) தாமோதரன் பிள்ளை

8. ‘இலக்கியம்’ என்பது காலங்கள் தோறும் காட்சி விளக்கக் குரல்களாகக் கேட்கும் கூட்டுக் குரல் ஒலியே என மொழிந்தவர்

(a) பிரடரிக் (b) கெல்லர்

(c) ரெனிவெல்லக் (d) ரட்சன்

9. ‘மொழியியலும் கவிதையியலும்’ என்ற கட்டுரையை எழுதியவர்

(a) பிரடரிக் (b) ரோமன் யகோப்சன்

(c) ரெனிவெல்லக் (d) ரட்சன்

10. ‘சிவப்பு அரங்கின் கனவு’ என்பது எம்மொழியில் தோன்றிய முதல் நாவல்

(a) சீனம் (b) ஜெர்மன்

(c) இத்தாலி (d) ரஷ்யா

11. இலக்கியம் என்பது ‘சமுதாயத்தின் புலப்பாடு’ என்றவர்

(a) டைலர் (b) ஜான்சன்

(c) யோவாக் (d) தேபொனால்ட்

12. ‘சமயமும் இலக்கியமும்’ என்ற கட்டுரையை எழுதியவர்

(a) பெர்னாட்சா (b) டி.எஸ்.எலியட்

(c) யோவாக் (d) ரூசோ

13. கற்பனாவாத சோஷலிசவாதிகளுள் குறிப்பிடத்தக்கவர்

(a) ராபர்ட் (b) டிக்கன்ஸ்

(c) சான்சிமோன் (d) ரூசோ

14. சமூகம் பற்றிய வரலாற்றை விஞ்ஞானத்தின் அடிப்படையில் வலியுறுத்தியவர்

(a) மார்க்ஸ் (b) பெர்னாட்சா

(c) டால்ஸ்டாய் (d) ரூசோ

15. ‘A Vindication of the rights of Women’ என்ற நூலின் ஆசிரியர்

(a) கியூரி

(b) எலிசபெத்

(c) மேரிவுல்ஸ்டன் கிராப்ஃட்

(d) ரூபெல்லா

16. ‘பழையோள்’ எனப் பண்டைய இலக்கியங்களில் குறிக்கப் பெறுபவள்

(a) இலக்குமி (b) கொற்றவை

(c) கலைமகள் (d) கண்ணகி

17. உளவியலாய்வுக்கு அறிவியல் தகுதி அளித்தவர்

(a) கார்லைல் (b) லெசாட்சா

(c) ஹோல்டர் (d) சிக்மண்ட் பிராய்டு

18. ஒவ்வாப் பாலியல் விழைவுகளை ஈடிபஸ் வேணவா (Oedipus complex) என்று குறிப்பிட்டவர்

(a) மார்க்ஸ் (b) பெர்னாட்சா

(c) பிராய்டு (d) ரூசோ

19. ‘மொழி மரபாலும் (Convention) உடன்பாட்டாலுமே உண்டாகியது’ என்றவர்

(a) அரிஸ்டாட்டில் (b) சாக்ரடீஸ்

(c) டால்ஸ்டாய் (d) ரூசோ

20. ‘பேச்சுமொழி என்பது ஒலியமைப்புகளாலானது; விதிகளால் நிர்ணயிக்கப்பட்டது’ என்றவர்

(a) சக்திவேல்

(b) தமிழவன்

(c) தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

(d) அகத்திய லிங்கம்

21. ஒவ்வொரு சொல்லையும் ஒரு குறியாகக் கருதியவர்

(a) ஓலைடா (b) கென்னடி

(c) டால்ஸ்டாய் (d) சசூர்

22. கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டத்தை 1992ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்றுக்கொண்டவர்

(a) சசூர் (b) பிரடரிக்

(c) தெரிதா (d) வெனில்டா

23. யமுனா என்னும் பாத்திரம் இடம்பெற்ற புதினம்

(a) மோகமுள்

(b) மரப்பசு

(c) நளபாகம்

(d) சில நேரங்களில் சில மனிதர்கள்

24. ஏணிப்படிகள் நாவலின் ஆசிரியர்

(a) நீல பத்மநாபன்

(b) சிவசங்கரி

(c) தகழி சிவசங்கரம் பிள்ளை

(d) லட்சுமி

25. 'நுண்வெளிக் கிரணங்கள்' என்னும் நூலினை எழுதியவர்

(a) பார்த்தசாரதி (b) அகிலன்

(c) கல்கி (d) சு. வேணுகோபால்

26. பாரதியாரை 'மகாகவி' எனக் கருதமுடியாது என வாதிட்டவர்

(a) வ. ரா. (b) கல்கி

(c) பிச்சமூர்த்தி (d) புதுமைப்பித்தன்

27. இலங்கையிலிருந்து ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு ஆரம்பமாகிய ஆண்டு

(a) 1960 (b) 1974

(c) 1978 (d) 1983

28. 'உயிரின ஒருமைப்பாடு' என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்

(a) வொயில்ட் (b) மிருணாள்

(c) அலெக்சாண்டர் (d) கார்ல் மோபியாஸ்

29. 'இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே திறனாய்வு' என்றவர்

(a) மார்க்ஸ் (b) பெர்னாட்சா

(c) விக்டர் யூகோ (d) ரூசோ

30. படைப்பாளியின் வரலாறு தெரியாமையால் கற்பவர் இழப்பது ஒன்றுமில்லை என்றவர்

(a) முர்ரே (b) கார்லைல்

(c) தெரிதா (d) செபிக்

31. ரோமானிய வரலாற்று நாயகர்களின் சரிதைகளை 'வாழ்க்கைகள்' என்ற பெயரில் எழுதியவர்

(a) ரெனிவெல்லக் (b) புளுட்டாரக்

(c) டால்ஸ்டாய் (d) ஏங்கல்ஸ்

32. கவிதை 'யதார்த்த அல்லது யதார்த்தம் போன்று காணப்படக் கூடிய உலகைக் குறிப்பது' என்றவர்

(a) ஷெல்லி (b) கீட்ஸ்

(c) டி. எஸ். எலியட் (d) வேர்ட்ஸ்வெர்த்

33. தருக்க முறைமைக்கு ஏற்ற வடிவமைப்பே இலக்கியப் பொருண்மை என்றவர்

(a) ஷெல்லி (b) ரான்சன்

(c) டி. எஸ். எலியட் (d) ரான்சம்

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

34. (a) குறிக்கோளியல் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) வரலாற்றுச் சூழலும் இலக்கிய வடிவங்களும் குறித்து விவரிக்க.

35. (a) புதுமைத் திறனாய்வில் பொருண்மைக் கோட்பாடு பெறும் இடத்தினை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(b) இலக்கிய வரலாறு எழுதுவதின் ஐந்து வகைகள் யாவை?

36. (a) மூலபாட ஆய்வு முறையினைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(b) தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகள் குறித்து விளக்குக.

37. (a) சோசலிச எதார்த்தம் - விளக்கியுரைக்க.

(அல்லது)

(b) தாராளவாதப் பெண்ணியத்தின் தன்மைகளை எடுத்துரைக்க.

38. (a) கனவுத்தி குறித்து விவரிக்க.

(அல்லது)

(b) அகப்பாடலும் பிரதிக்குறியியலும் பெறுமிடத்தை ஆராய்க.

39. (a) பின் நவீனத்துவ திறனாய்வை விவரிக்க.

(அல்லது)

(b) கதைமாந்தர் குறித்து விரித்தெழுதுக.

40. (a) பின்னைக் காலனியத்துவம் தொடக்கமும் பின்புலமும் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(b) புலம்பெயர் படைப்புகளில் கவிதை, சிறுகதை, நாவல் பெறுமிடத்தை ஆய்ந்துரைக்க.

---

**N–0285**

**Sub. Code**
**205124**

**M.A. DEGREE EXAMINATION, MAY 2023.**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Year – Second Semester**

**Tamil**

**கல்வெட்டியல்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (33 × 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. 'விடேல் விடுகு' பெற்றவன்

   (a) நந்திவர்மன் (b) சிம்மவிஷ்ணு

   (c) பராந்தகன் (d) நெடுஞ்செழியன்

2. புலிமான் கோம்பை நடுகற்களின் எண்ணிக்கை

   (a) 2 (b) 3

   (c) 5 (d) 6

3. நடுகற்களில் வீரனின் பெயரும் புகழும் எழுதப்படுவதைக் குறிப்பிடும் நூல்

   (a) அகநானூறு (b) பரிபாடல்

   (c) குறுந்தொகை (d) கலித்தொகை

4. ‘சதிக்கல்‘ - யார் காலத்தில் அதிகமாக உள்ளன?

(a) பல்லவர் (b) நாயக்கர்

(c) சோழர் (d) பாண்டியர்

5. நடுத்திராவிட மொழிகளுள் ஒன்று

(a) கன்னடம் (b) பிராகூய்

(c) தெலுங்கு (d) மலையாளம்

6. கல்வெட்டின் இறுதியில் இடம்பெறுவது

(a) மன்னன் பெயர் (b) ஆட்சியாண்டு

(c) ஓம்படைக்கிளவி (d) கையெழுத்து

7. ‘ஜானபதம்‘ என்பதன் பொருள்

(a) அரசுடையது (b) மக்களுடையது

(c) வரிப்பணம் (d) தீர்ப்பு

8. மெய்க்கீர்த்திகள் எவ்வகைப்பாவால் எழுதப்பெறும்?

(a) வெண்பா (b) வஞ்சிப்பா

(c) கலிப்பா (d) அகாற்பா

9. முதலாம் இராசராசன் கல்வெட்டு எவ்வாறு தொடங்கும்?

(a) திருமாது (b) திருமன்னி

(c) கடல்சூழ்ந்த (d) காந்தளூர்ச்சாலை

10. பிரகஸ்தி யாருடையது?

(a) சேரர் (b) பல்லவர்

(c) சோழர் (d) பாண்டியர்

11. அசோகர் கல்வெட்டுகளின் பெரும்பிரிவுகள்

(a) 2 (b) 4

(c) 3 (d) 5

12. தமிழின் தொன்மைச் செப்பேடு ——————

(a) சிவகாசிச் செப்பேடு

(b) பள்ளன் கோயில் செப்பேடு

(c) கொலம் செப்பேடு

(d) வேள்விக்குச் செப்பேடு

13. பெரிய லெய்டன் செப்பேடுகள் யார் காலத்தன?

(a) சுந்தர சோழன் (b) குலோத்துங்கன்

(c) இராசராசன் (d) இராமசேந்திரன்

14. செப்பேட்டு வாசகத்தை எழுதுபவரை எவ்வாறு குறிப்பிடுவர்?

(a) குற்றெழுத்து (b) வெட்டெழுத்து

(c) ஓலை (d) நெட்டெழுத்து

15. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் யார் காலத்தடை

(a) முதலாம் இராசேந்திரன்

(b) குலோத்துங்கன்

(c) முதலாம் இராசராசன்

(d) சுந்தரசோழன்

16. அசோகர் கல்வெட்டுகளைப் படித்து உரைத்தவர்

(a) சேம்சு பிரின்செப்

(b) கிறிஸ்டியன் வாசன்

(c) சர்சார்லஸ் வில்கீன்ஸ்

(d) டாக்டர் ஈ. உல்ஷ்

17. யார் காலத்திய கல்வெட்டுகள் அதிகம் கிடைத்துள்ளன?

(a) பல்லவர் (b) பாண்டியர்

(c) சோழர் (d) நாயக்கர்

18. பிராமிக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் என்று கூறியவர் __________

(a) நடனகாசிநாதன்

(b) மயிலை சீனிவேங்கடசாமி

(c) கே.வி.சுப்பிரமணியன்

(d) இரா.நாகசாமி

19. சக சகாப்தம் யாருடைய காலத்தில் அதிகம் பயன்பாட்டுக்கு வந்தது?

(a) சுந்தரபாண்டியன்

(b) இரண்டாம் புலிகேசி

(c) இராசராசன்

(d) திருமலை நாயக்கர்

20. கொல்லம் ஆண்டைக் கி.பி.யில் கணக்கிட எத்தனை ஆண்டுகள் காட்டவேண்டும்?

(a) 31 (b) 50

(c) 56 (d) 824

21. நுழைவுவரி மற்றும் சுங்கவரியைக் குறிப்பது

(a) சித்திரம் (b) நாள்

(c) ஆயம் (d) இராசி

22. சமவயங்க சுத்த என்னும் நூல் சுட்டும் எழுத்துகளின் எண்ணிக்கை ________

(a) 18 (b) 32

(c) 64 (d) 21

23. அரிக்கமேடு பகுதியில் அகழாய்வு செய்தவர்

(a) எலியட் (b) மார்டிமர் வீலர்

(c) வி.வெங்கையா (d) முனைவர் பர்னல்

24. ஆதிச்ச நல்லூரில் கிடைத்த தாழிகளின் வடிவம்

(a) கூம்பு (b) சதுரம்

(c) வட்டம் (d) செவ்வகம்

25. 'கரோஷ்டி வரி வடிவத்திலிருந்து பெரும்பாலான வரிவடிவங்கள் தோன்றின' என்பவர்

(a) பால்க் (b) சிவராமமூர்த்தி

(c) சாலமன் (d) பி.பி.லால்

26. கிரந்த எழுத்துகளைப் பல்வேறு அழகான வடிவங்களில் எழுதியவன்

(a) நரசிம்மவர்மன் (b) மகேந்திரவர்மன்

(c) இராசராசன் (d) இராஜசிம்மன்

27. திராவிடி என்னும் சொல் காணப்படும் நூல்

(a) தேவாரம்

(b) சமவயங்கசுத்த

(c) மத்தவிலாசப் பிரகசனம்

(d) லலித விஸ்தரம்

28. இந்தியாவில் பானையின் மேல் பொறிக்கப்பட்ட குறியீடுகளின் ஆய்வினைத் தொடங்கி வைத்தவர்

(a) எஸ்.ஆர்.ராவ் (b) சாலமன்

(c) பிரான்பில் (d) சிவராமமூர்த்தி

29. இந்தியாவில் குறியீடுகள் அதிகம் காணப்படும் பகுதி

(a) தமிழகம் (b) கேரளம்

(c) ஆந்திரா (d) கர்நாடகா

30. அரச்சலூர்க்கல்வெட்டு எது பற்றியது?

(a) வரி (b) வம்சம்

(c) கொடை (d) இசை

31. ராஜகீயத்தின் வகை

(a) 2 (b) 3

(c) 4 (d) 5

32. 'ஆற்றுப்பாட்டம்' என்பது

(a) வருவாய் வரி (b) உழவுவரி

(c) சுங்கம் (d) தொழில்வரி

33. பொன்னின் அளவை எதனால் குறித்தனர்?

(a) கலம் (b) மஞ்சாடி

(c) நாழி (d) மா

பகுதி ஆ (7 × 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (a) பல்லவர் கல்வெட்டுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) அரச்சலூர்க் கல்வெட்டுகளின் சிறப்பினை எழுதுக.

35. (a) இந்தியாவில் வழங்கப்பெற்ற எழுத்துகள் பற்றி விவரி.

(அல்லது)

(b) இராசராசனின் மெய்க்கீர்த்திகளை விளக்குக.

36. (a) இந்திய அளவில் அசோகர் கல்வெட்டு பெறும் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) கல்வெட்டுகளால் அறியலாகும் வரிகள் பற்றி எழுதுக.

37. (a) பிராமி எழுத்து ஆராய்ச்சி பற்றி விளக்குக.

(அல்லது)

(b) தமிழறிஞர்களின் கல்வெட்டாய்வுப் பணிகளை விவரிக்க.

38. (a) கல்வெட்டுகளில் இடம்பெறும் காலம் பற்றிய வகைப்பாடுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) தமிழ் எழுத்துகளின் தோற்றம் குறித்து விவரி.

39. (a) அகழ்வாய்வில் கிடைக்கப்பெறும் பொருள்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) பட்டெழுத்தின் செல்வாக்கை விவரி.

40. (a) பல்லவகிரந்தம் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) வில்லம், கொடுமாலை பொருட்களின் குறியீடுகள் குறித்து எழுதுக.

| N–0286 |
|---|

| Sub. Code |
|---|
| 205131 |

**M.A.DEGREE EXAMINATION, MAY 2023.**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Third Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியங்கள்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($33 \times 1 = 33$)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. குறிஞ்சிப் பாட்டின் ஆசிரியர்

   (a) கபிலர் (b) நக்கீரர்

   (c) நப்பூதன் (d) பரணர்

2. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவிக்கும் பொருட்டு எழுந்த சங்க நூல்

   (a) குறிஞ்சிப்பாட்டு (b) புறநானூறு

   (c) முல்லைப்பாட்டு (d) தமிழ்விடு தூது

3. பண்டைத் தமிழரின் ஏறுதழுவுதலைச் சிறப்பித்துக் கூறும் கலி

   (a) குறிஞ்சிக் கலி (b) மருதக் கலி

   (c) முல்லைக் கலி (d) பாலைக் கலி

4. ஆயர்குல மக்களை இவ்வாறும் அழைப்பர்

(a) வேட்டுவர் (b) பொதுவர்

(c) கானவர் (d) அனைத்தும் சரி

5. தலைவன், ஆயர்குல மகள் மேற்கொண்டதாகக் கூறும் தொழில்

(a) தேன் விற்றல் (b) உப்பு விற்றல்

(c) கள்விற்றல் (d) மோர் விற்றல்

6. தலைவியைக் கண்ட தலைவனின் நெஞ்சுத் தடுமாற்றத்திற்குக் கூறப்பட்ட உவமை

(a) மத்திற் பிணித்த கயிறு

(b) கடுஞ்சூலா நாகு

(c) கைதோயான் மாத்திரை

(d) அனைத்தும் சரி

7. ஐங்குறுநூற்று மருதத்திணை பாடியவர்

(a) ஓரம்போகியார் (b) கபிலர்

(c) அம்மூவனார் (d) ஓதலாந்தையார்

8. ஐங்குறுநூற்று மருதக் கருப்பொருள்களில் ஒன்று

(a) மஞ்ஞை (b) கடுவன்

(c) கள்வன் (d) வெள்ளாங் குருகு

9. வரைவு கடாயது என்பதில் வரைவு என்பதன் பொருள்

(a) விரைவு (b) கடிதம்

(c) திருமணம் (d) இவை எதுவுமில்லை

10. 10, 20, 30 என முடியும் அகநானூற்றுப் பாடல்கள் எத்திணைக்கு உரியன?

(a) குறிஞ்சி (b) முல்லை

(c) மருதம் (d) நெய்தல்

11. “மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்” எனப்பாடுவோன்

(a) இராமன் (b) பரசுராமன்

(c) பலராமன் (d) சிவன்

12. “வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வை” என்னும் தொடரில் கவ்வை என்பதன் பொருள்

(a) அலர் (b) அம்பல்

(c) கலைக்கோல் (d) ஆரவாரம்

13. நிலத்தினும் பெரிது, வானினும் உயர்வு எனத் தலைவி கூறுவது

(a) தலைவன் நட்பு (b) தலைவன் பிரிவு

(c) தலைவி சினம் (d) தலைவி காமம்

14. கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை எனச் சுட்டப்படுவோன்

(a) பாணன் (b) பாங்கன்

(c) தலைவன் (d) சான்றோன்

15. கையில் ஊமன் கண்ணிற் காக்கும் வெண்ணெய் உணங்கலில் உணங்கல் என்பது

(a) ஆகத்திற்கு உவமை

(b) ஞாயிற்றுக்கு உவமை

(c) தலைவிக்கு உவமை

(d) தலைவனுக்கு உவமை

16. தச்சன் செய்த சிறுமா வையம் என்னும் தொடரில் வையம் என்பதன் பொருள்

(a) குதிரை (b) தேர்

(c) பாவை (d) உலகம்

17. திண் தேர்ப் பொறையன் தொண்டி தன் திறம் பெறுக எனத் தலைவனால் பாராட்டப்படுபவர்

(a) தலைவி (b) தோழி

(c) நற்றாய் (d) பாடினி

18. நற்றிணையைத் தொகுத்தோன்

(a) பூரிக்கோ (b) கூடலூர் கிழார்

(c) நல்லந்துவனார் (d) மாறன் வழுதி

19. நொதுமலர் பொருள் தருகு

(a) வாடிய மலர் (b) தலைவி

(c) கையுறை (d) அயலார்

20. கொல்லன் எறி பொன் பிதிரின் சிறு பல தாஅய் உதிரும் பூ

(a) குறிஞ்சி (b) முல்லை

(c) வேங்கை (d) குவளை

21. வையை ஆற்று வெள்ளத்திற்கு ஒப்புமையாக வருவன

(a) ஆடல் அறியா அரிவை

(b) ஊடல் அறியா உவகையள்

(c) பழன உழவர் பாய் புனல்

